**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனித்திங்கள் 17-ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 01-ம் நாள் புதன்கிழமை

CNR:NO: TNNG03-000182-2025

**இந்து திருமண அசல் மனு எண்.142/2025**

புவனேஸ்வரி ......................மனுதாரர்

....எதிர்....

சீனுவாசன் (எ) சிவக்குமார் .................எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.06.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சுவாதிமுத்து அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..........

**ஆணையுரை**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.10.2015 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்க கோரியும், இதர உகந்த பரிகாரங்கள் வழங்க கோரியும், இந்து திருமண சட்டம் பிரிவுகள் 13(1) (i-a), 13(1) (i-b) -ன் கீழ் இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## II. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.10.2015 அன்று

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.01 17:07:51 +0530

பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, நாகூர் S.T.S. கமலா திருமண மண்டபத்தில் இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின்போது மனுதாரருக்கு 13 பவுன் தங்க நகையும், சீர்வரிசை சாமான்களும் வாங்கி கொடுக்கப்பட்டது என்றும், திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் நாகூரில் கணவன் மனைவியாக குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றும், எதிர்மனுதாரர் திருமணத்தின்போது நகைக்கடையில் வேலை பார்த்து வந்தார் என்றும் அதன்பிறகு ஒழுங்காக வேலைக்கு செல்லாமல் தினமும் நண்பர்களுடன் சென்று குடிப்பதும், ஊர் சுற்றுவதுமாக இருந்தார் என்றும், எதிர்மனுதாரர் குடிப்பதற்கு பணம் வேண்டுமெனவும், கடன்களை கொடுக்க வேண்டுமெனவும் கூறி மனுதாரரின் சீர்வரிசை நகைகளை வாங்கி அடகு வைத்தும் விற்றும் குடித்து வீணாக்கிவிட்டார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரை வேலைக்கு சென்று சம்பாதிக்கும்ப்டி கூறினால் எதிர்மனுதாரர் வரதட்சணையாக மேலும் நகை, பணம் வாங்கி வா என்று கூறி மனுதாரரை அவ்வப்போது அடித்து உதைத்து வீட்டை விட்டு வெளியேற்றிவிடுவார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரின் கொடுமைகளை தாங்கிக்கொண்டு குடும்ப நலன் கருதி சேர்ந்து வாழ்ந்து வந்ததன் பயனாக மனுதாரர் கருவுற்றார் என்றும், மனுதாரருக்கு எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் சத்தான உணவுகளும், மருத்துவ உதவிகளும் அளிக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் இழைத்த கொடுமைகள் காரணமாக மனுதாரர் தன் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றும், 20.05.2018 ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது என்றும், குழந்தைக்கு ஹர்ஜித் என்று பெயர் சூட்டி மனுதாரர் வளர்த்து வந்தார் என்றும், எதிர்மனுதாரர் குழந்தையையும், மனுதாரரையும் அழைத்து சென்று வாழ வைக்காமலும், எவ்வித வாழ்க்கை பொருளுதவியும் அளிக்காமல், அவ்வப்போது எதிர்மனுதாரர் போனில் மனுதாரரை கொலைமிரட்டல் விடுப்பதும், சந்தேகப்பட்டு பேசியும் மிரட்டியும் வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் குடிப்பழக்கத்தை கைவிடவும்

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.01 17:07:55 +0530

இல்லை என்றும், மனுதாரருடைய நகைகள், சீர்வரிசை பொருட்கள் யாவும் எதிர்மனுதாரரிடம்தான் உள்ளது என்றும், மனுதாரரிடம் ஒப்படைக்கவும் இல்லை என்றும், மனுதாரர் தன் பெற்றோர் வீட்டில் இருந்துக்கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும், இனிமேலும் எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ வழிவகை இல்லை என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரை விட்டு கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து இருந்து வருகிறார் என்றும், மனுதாரர் உறவினர் மூலமாக சேர்ந்து வாழ வைக்க எடுத்த நடவடிக்கையும் தோல்வியில் முடிந்துவிட்டது என்றும், எதிர்மனுதாரருக்கு அவரது குடும்பத்தினர் ஆதரவாக இருந்து வருவதுடன் மனுதாரரை அழைத்து சென்று வாழ வைக்காமல் இருப்பதால் மனுதாரர் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளார் என்றும், எனவே, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பெற்றுக் கொள்ள மனுதாரர் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

III. மனுதாரரின் மனுவின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு உரிய முறையில் நீதிமன்றம் மூலமாகவும், தபால் மூலமாகவும் அழைப்பாணை அனுப்பி பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றம் ஆஜராகாததால் கடந்த 16.04.2026 அன்று எதிர்மனுதாரரை தோன்றா தரப்பினராக தீர்மானித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

## IV. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை

மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?

V. மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.01 17:07:59 +0530

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## VI. பிரச்சனைக்கான தீர்வு

**1)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை நிரூபிக்கும் விதமாக மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 மனுவில் கூறியுள்ள சங்கதிகளை அனுசரித்து முதன்மை விசாரணை வாக்குமூலம் அளித்துள்ளார். மனுதாரர் தனது கட்சிக்கு ஆதரவாக 26.10.2015 தேதியிட்ட மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆவணமாகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.2 ஆவணமாகவும், 31.07.2018 தேதியிட்ட மனுதாரரின் குழந்தையின் பிறப்பு சான்று ம.சா.ஆ.3 ஆவணமாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**2)** மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்மனுதாரர் தினமும் மது அருந்திவிட்டு மனுதாரரின் நடத்தை சந்தேகப்பட்டு, தகாத வார்த்தைகளால் பேசி, அடித்து துன்புறுத்தி வந்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் குழந்தையையும், மனுதாரரையும் அழைத்து சென்று வாழ வைக்காமலும், எவ்வித வாழ்க்கை பொருளுதவியும் அளிக்காமல், அவ்வப்போது எதிர்மனுதாரர் போனில் மனுதாரரை கொலைமிரட்டல் விடுப்பதும், சந்தேகப்பட்டு பேசியும் மிரட்டியும் வருகிறார் என்றும், மனுதாரர் தன் பெற்றோர் வீட்டில் இருந்துக்கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரை விட்டு கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து இருந்து வருகிறார் என்றும், மனுதாரரின் மனு மற்றும் சாட்சியம் மூலம் கூறப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் அறிவிப்பு பெற்றுக்கொண்டும் நீதிமன்றம் ஆஜராகி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை மறுத்து எவ்வித எதிர்கட்சியும் செய்யாததால் மனுதாரரின் வழக்கை ஏற்க வேண்டியுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.01 17:08:05 +0530

**3)** மனுதாரரின் மனுவை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்து வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரரின் மனு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மனுதாரரும், எதிர்மனுதாரரும் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் எதிர்மனுதாரரை மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவிடுவது இருவரின் வாழ்க்கையிலும் நிம்மதியை ஏற்படுத்தாது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.10.2015 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடுகிறது.

VII. **முடிவாக,**

1. **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.10.2015 அன்று நடைபெற்ற திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, பிழைநீக்கம் செய்து இன்று 01.07.2026 அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.01 17:08:09 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

ம.சா.1 திருமதி. புவனேஸ்வரி (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 26.10.2015 | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் | (அசல்) |
| ம.சா.ஆ.2 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |
| ம.சா.ஆ.3 | 31.07.2018 | மனுதாரர் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் | (நகல்) |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>** : இல்லை

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.01 17:08:15 +0530

சார்பு நீதிபதி,
நாகப்பட்டினம்.

Draft / Fair **உத்தரவு**
சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்
**இந்து திருமண அசல் எண்.142/2025**
நாள் : 01.07.2026